**மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.10.12 சபையமர்வு அறிக்கை**

2022.10.12ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும்.

## 1. கடந்தகால சபை அறிக்கையை சமர்ப்பித்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையில் தீர்மான இலக்கம் 04இன்படி மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்திற்கான மின்சார இணைப்பை பெற்றுக்கொள்ளும் விடயத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளோம், அவ்விடயத்திற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டுமென ஒரு அறிவித்தல் ஒன்றை வழங்கியுள்ளனர். அவ்விடயத்திற்கான மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அடுத்ததாக ஜனாதிபதி காரியாலயத்தில் இருந்து பிரிமா மா தொடர்பான விடயத்திற்கு கடந்தை சபைக்கு கடிதமொன்று கிடைக்கப்பெற்றிருந்தது அதற்கான பதில் சம்பந்தப்பட்ட அமைச்சில் இருந்து வந்து விட்டதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இல்லை, அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி தான் எமக்கு கிடைக்கப்பெற்றது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு கடிதமனுப்பி நமக்கு உரிய பதிலை குறித்த காலத்தில் அனுப்புமாறு கூறியிருந்தும் இன்னும் பதில் கிடைக்கவில்லை, எனவே இன்னும் பதில் கிடைக்கவில்லை என்று கடிதமனுப்புங்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையில் சமுர்த்தி வங்கி தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்து, அதற்கமைவாக கடிதம் அனுப்பப்பட்டு பதில் கிடைக்கப்பெற்றுள்ளதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடிதம் அனுப்பப்பட்டுள்ளது பதில் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

ஏன் இவ்விடயத்தை நான் குறிப்பிட்டு கூறுகின்றேன் என்றால் முதியோர் கொடுப்பனவு அனைத்தும் சமுர்த்தி வங்கிகள் மூலமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அதற்கான ஒழுங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே எமது பிரதேசத்தில் உள்ள அனைவரும் நோர்வூட்டிற்கு தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது. தற்போதுள்ள பிரயாண செலவுகளை பார்க்கும் போது அவர்கள் பாரிய சிக்கலுக்கு முகங்கொடுக்க நேரிடும். அனைவரும் ஒரே தினத்தில் சென்று பணத்தை பெற்றுக்கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. அனைவரும் முதியவர்கள், எனவே அவர்களுக்கு இங்கு பணத்தை பெற்றுக்கொள்வதற்கான ஏதாவது வழிவகையினை செய்ய வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, இது தொடர்பாக நாம் பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். முதியோர்கள் இவ்விடயம் தொடர்பாக மிகவும் பாதிப்படைகின்றனர் எனவே இதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த மாத சபையமர்வு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 01**

2022.09.12ம் திகதி நடைபெற்ற சபையமர்வின் அறிக்கை சரியென சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 2. கௌரவ தவிசாளர் அவர்களின் விசேட அறிவித்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக எனது விசேட பிரேரணையில் கடந்த மாதம் சபையில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை தொடர்பாக கூறியிருந்தேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் அவர்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் அவர்களும் மற்றும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் அவர்களும் முன்வைத்த தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு அமைய பொதுவாக அனைத்து கௌரவ உறுப்பினர்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தீர்கள் அதற்கான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்ததாக ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும், இவ்விடயம் அனைத்து கௌரவ உறுப்பினர்களை குறிப்பிடவில்லை, சில கௌரவ உறுப்பினர்கள் அனுமதியில்லாமல் கட்டப்படும் கட்டிடங்களுக்கு நேரடியாக சென்று நின்று நீங்கள் கட்டுங்கள் நான் பார்த்துக்கொள்கின்றேன் என்று கூறுகின்றனர். நாம் மக்களிடம் வாக்கு பெற்று வந்துள்ளோம், மக்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் தான். ஆவணங்கள் இல்லையெனின் அவற்றை தயார்ப்படுத்திக் கொடுக்க வேண்டும். உதவி செய்யும் போது உரிய ஆவணங்கள் இருக்குமாயின் அது பிரச்சினை இல்லை, ஆவணங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் உதவி செய்வதனால் குறித்த நபர்கள் பாரிய பிரச்சினைக்கு உள்ளாகின்றனர், நாங்கள் 02 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அதனால் கௌரவ உறுப்பினர்கள் நமக்கு வாக்களித்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் அதே சந்தர்ப்பத்தில் அவர்களை அசௌகரியமான சூழ்நிலைக்கு தள்ளப்படக்கூடாது என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

## 3. பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்ற கடிதங்கள் முறைப்பாடுகளை சபைக்கு முன்வைத்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - 2022ம் ஆண்டு ஜீலை மாத சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கௌரவ உப தவிசாளர் P.P..பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

இனிவருங்காலங்களில் சபை சட்டத்திட்டங்களுக்கு அமைய சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சபையமர்வு நடவடிக்கைகள் தொடர்பாக கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்களினால் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

**கடித இல 02**

**அனுப்புனர்** - நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.

**விடயம்** - திடீர் மரண விசாரணை அதிகாரி நியமித்தல் தொடர்பான கடிதம்.

**கடித இல 03**

**அனுப்புனர்** - சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு.

**விடயம்** - வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பான கடிதம்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி திணைக்களம் - மத்தியமாகாண சபை.

**விடயம்** - உள்ளூராட்சி நிறுவனங்களின் இடம் தொடர்பான உரிமை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கடிதம்.

**கடித இல 05**

**அனுப்புனர்** - ஆளுனர் செயலாளர் அலுவலகம் - மத்திய மாகாண சபை.

**விடயம்** - வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பான கடிதம்.

திகதி - 2022.10.12

**கடித இல 06**

**அனுப்புனர்** - விடயப்பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - கொவிட் - 19 காலத்திற்கான டென்டர்தாரர்களுக்கு சலுகை பெற்றுக்கொடுத்தல் தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 02**

2021ம் ஆண்டு கொவிட் தொற்று காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் உள்ள நாட்களுக்கான நிவாரண தொகை 1,151,920.00 ஆகின்றது, குறிப்பிட்ட தொகையை நிவரணமாக வழங்கினால் அது சபைக்கு ஒரு அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தும், எனினும் டென்டர் தொகையில் நூற்றுக்கு 10 வீதம் படி நிவராணம வழங்கினால் 533,610.00 ரூபா சபைக்கு மிகுதியாக இருக்கும் எனவே 2021ம் ஆண்டுக்கான சகல டென்டர்தாரர்களுக்குமான நிவாரணமாக நூற்றுக்கு பத்து வீதத்தின் படி ரூபா 618310.00விற்கான சலுகையினை பெற்றுக்கொடுக்க சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

## 4. நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த தீபாவளி பண்டிகையை முன்னிட்டு களியாட்ட நிகழ்வுகள் மற்றும் தற்காலிக கடையறைகளை டென்டரில் வழங்குதல் தொடர்பான விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த தீபாவளி பண்டிகையை முன்னிட்டு களியாட்ட நிகழ்வுகள் மற்றும் தற்காலிக கடையறைகளை டென்டரில் வழங்கும் போது ஒரே நபரின் பெயரில் 03 விண்ணப்பங்கள் முன்வைத்தமை தொடர்பான விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயத்தை நன்கு தேடி பார்த்து தான் கொடுத்தோம். அவரது 02 டென்டரினை இரத்து செய்து விட்டு மற்றுமொன்றுக்கு வழங்கினோம். இதில் நம்முடைய பங்களிப்பும் உள்ளது. அங்குள்ள ஒரு நபர் அனைவரையும் கடையிற்கு விண்ணப்பிக்க கூறிவிட்டு, நாம் டென்டர் திறக்கும் போது குழப்ப நிலையை தோற்றவிக்கின்றார். சம்பந்தப்பட்ட நபர் அனைத்து கடைகளையும் எடுக்க பார்க்கின்றார், அவருக்காக நாம் டென்டர் விதிமுறைகளை விட்டுக்கொடுக்க முடியாது. முறைப்படி விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த தீபாவளி பண்டிகையை முன்னிட்டு களியாட்ட நிகழ்வுகள் மற்றும் தற்காலிக கடையறைகளை டென்டரில் வழங்குதல் தொடர்பான விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

(கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் மு.ப 10.15 அளவில் சபையமர்வு நடவடிக்கையில் இருந்து வெளியில் சென்று 10.40 அளவில் மீண்டும் சபைக்கு வருகை தந்தார்.)

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்வாறான சூழ்நிலை இறைச்சி கடை டென்டர் நிகழ்வின் போது ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும், அவ்விடயத்திற்கு எனக்கு அச்சந்தர்ப்பத்தில் பதில் வழங்கவும் வேண்டும். இவ்விடயத்தை கட்டாயம் சபையறிக்கையில் பதிய வேண்டும்.

நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த தீபாவளி பண்டிகையை முன்னிட்டு களியாட்ட நிகழ்வுகள் மற்றும் தற்காலிக கடையறைகளை டென்டரில் வழங்குதல் தொடர்பான விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயத்தை இத்துடன் முடிப்போம் வேறு நபர்கள் யாரும் டென்டர் எடுக்காததனால் அவர் போட்டிருந்த ஏனைய 02 விண்ணப்பங்களை மீள பெற்றுக்கொண்டார். அங்கிருந்த சில நபர்கள் ஒரு கடையை கூட டென்டரில் வழங்க கூடாது என்று செயற்பட்டுக்கொண்டிருந்தனர். இவற்றிற்கு நாம் இடம் கொடுக்க முடியாது. இவ்விடயத்தை இத்துடன் முடிப்போம்.

நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த வாராந்த சந்தையினை ஆரம்பிப்பது தொடர்பாகவும் மஸ்கெலியா பிரதேச சபைக்கான கலி இயந்திரத்தை கொள்வனவு செய்வது தொடர்பான விடயம் தொடர்பாகவும் கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

நிதிக்குழு அறிக்கைகளை அனுமதித்தல் தீர்மானமெடுத்தல் தொடர்பாகவும் கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**2022.09.14ம் திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் பின்வருமாறு தீர்மானங்களாக சபையில் நிறைவேற்றப்பட்டன.**

**விடய இல 01**
மஸ்கெலியா பிரதேச சபைக்கான கலி இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது.

**தீர்மான இல 03**
விமைனுகோல்கள் நிதிக்குழுவில் திறக்கப்பட்டு மாகாண தொழிற்நுட்ப குழுவின் சிபாரிசினை பெற்ற பின் உரிய நடவடிக்கையை எடுக்க நிதிக்குழு சிபாரிசு செய்தது.

**2022.09.26ம் திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் பின்வருமாறு தீர்மானங்களாக சபையில் நிறைவேற்றப்பட்டன.**

**விடய இல 01**
தீபாவளி களியாட்ட நிகழ்வுகள் மற்றும் தற்காலிக கடையறைகளை டென்டரில் வழங்குதல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 04**
குறித்த டென்டர் அறிவித்தலில் அடிப்படையில் டென்டர் நிகழ்வினை நடத்த சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 02**
RD – 1231 இலக்கமுடைய டிரக்டர் வாகன திருத்தம் காரணமாக வாகன சாரதியினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 05**
குறித்த விடயம் தொடர்பாக தொழிநுட்ப குழுவிற்கு சமர்ப்பித்து பரிசீலனைக்கு உட்படுத்திய பின் திருத்த வேலைகளை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 03**
ஆயுர்வேத வைத்தியசாலையில் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கான உத்தேச விலைப்பட்டியல் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 06**
குறித்த திருத்த வேலைகளை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது. (10,694.52)

**விடய இல 04**
ZB – 0394 இலக்கமுடைய கம்பெக்டர் வாகன திருத்தம் காரணமாக வாகன சாரதியினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 07**
குறித்த விடயம் தொடர்பாக தொழிநுட்ப குழுவிற்கு சமர்ப்பித்து பரிசீலனைக்கு உட்படுத்திய பின் திருத்த வேலைகளை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 05**
RF – 7744 இலக்கமுடைய டிரக்டர் வாகன திருத்தம் காரணமாக வாகன சாரதியினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 08**
குறித்த விடயம் தொடர்பாக தொழிநுட்ப குழுவிற்கு சமர்ப்பித்து பரிசீலனைக்கு உட்படுத்திய பின் திருத்த வேலைகளை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 06**
சபை காரியாலயத்தின் நிழற்பிரதி இயந்திரத்தை சேர்விஸ் செய்வதற்கான விலைப்பட்டியல் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 09**
நிழற்பிரதி இயந்திரத்தை சேர்விஸ் செய்ய சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 07**
டாக்டர் பிரசன்ன குரே என்ற புத்தக ஆசிரியரினால் வெளியிடப்பட்ட Politics of a Raninforest Battle to save sinharaja என்ற புத்தகத்தை எமது நூலகங்களுக்கு கொள்வனவு செய்யும் படி கோரியுள்ள கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 10**
மேற்படி புத்தகங்கள் இரண்டினை கொள்வனவு செய்து மஸ்கெலியா பொது நூலகத்திற்கும் சாமிமலை வாசிகசாலைக்கும் வழங்க சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 08**
ரிக்காடன் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் உரம் சலிக்கும் இயந்திரத்தினை திருத்தியமைப்பதற்கான உத்தேச விலைப்பீடு நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 11**
மேற்படி இயந்திரத்தின் அவசியத்தன்மையினை கருத்திற்கொண்டு அவ்வியந்திரத்தில் புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது. (85840.00)

**விடய இல 09**
ரிக்காடன் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் கூரைத்தகடுகளை புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான உத்தேச விலைமதிப்பீடு நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 12**
ரிக்காடன் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கூரைத்தகடுகளை புதுப்பித்து கொடுப்பதற்கு சபை அனுமதி வழங்கியது. (47030.00)

**விடய இல 10**

மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் Manhol வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கான உத்தேச விலைமதிப்பீடு நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 13**

சபையின் நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு இவ்வேலைத்திட்டத்தினை பிற்போட சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 11**

வாராந்த சந்தை ஆரம்பிப்பது தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 14**

மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தற்காலிக கடையறைகளை தற்போது டென்டரில் வழங்கவிருப்பதனால், தீபாவளி பண்டிகை நிறைவுற்றதன் பின்னர் வாராந்த சந்தை நடவடிக்கையை மேற்கொள்ள நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**2022.10.06ம் திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் பின்வருமாறு தீர்மானங்களாக சபையில் நிறைவேற்றப்பட்டன.**

**விடய இல 01**

மஸ்கெலியா பொது நூலகம் மற்றும் சாமிமலை வாசிகசாலையின் பழைய பத்திரிகைகளை விற்பனை செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவில் திறக்கப்பட்டது.

**தீர்மான இல 15**

| பெயர் | விலாசம் | தொகை |
|---|---|---|
| கே.செல்வரட்ணம் | இல 24, 2ம் வீதி , மஸ்கெலியா. | 172.50 |
| எஸ்.உதயகுமார் | இல 41, 4ம் வீதி, மஸ்கெலியா. | 169.00 |
| சு.சத்தியதரன் | இல 12, 02ம் வீதி, மஸ்கெலியா. | 179.00 |

அதிக தொகையை கோரியிருந்த திரு சு.சத்தியதரன் அவர்களுக்கு பத்திரிகைகளை விற்பனை செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்தது.

**விடய இல 02**

RF – 7744 இலக்கமுடைய டிரக்டர் வாகனத்திற்கான டயர்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

| | 600*6 | | | | | | 13.6 * 28 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **Brand** | **Tyre** | **Brand** | **Tube** | **Brand** | **Collar** | **Brand** | **Tyre** | **Brand** | **Tube** |
| **Crown tyres** | CEAT 8pr | 28,300.00 | Maxride | 2,600.00 | Passon / 3K | 750.00 | GRI 12pr | 131,000.00 | Nexen | 16,500.00 |
| **Perera tyre service** | GRI 6pr | 30,000.00 | Indian | 3,200.00 | Flap | 650.00 | GRI 12pr | 131,900.00 | Korean | 11,450.00 |
| **Sri Lanka state trading** | Ferantino 8pr | 36,041.00 | Indian | 3,611.00 | Flap | 759.00 | Alliance | 205,597.00 | - | - |
| **Dane Oil mart** | CEAT | 40,200.00 | GRI | 4,500.00 | - | - | GRI | 148,500.00 | GRI | 21,500.00 |
| **Indra motor** | CEAT | 39,420.00 | - | 5,500.00 | - | - | - | - | - | - |
| **MJR Peiris** | CEAT | 29,175.50 | Indian | 3,668.50 | Sri Lanka | 770.50 | GRI 12pr | 144,923.00 | Indian | 16,226.50 |
| **Kandy tractor** | - | - | - | - | - | - | - | - | - | - |

**தீர்மான இல 16**

விலையினையும் தரத்தினையும் கருத்திற்கொண்டு Crown tyres மற்றும் Prerera tyre நிறுவனத்தில் கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்தது.

**விடய இல 03**

2023ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 17**
உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை தொடர்பாக நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டு உத்தேச பாதீட்டறிக்கையினை சபைக்கு சமர்ப்பிக்க நிதிக்குழு சிபாரிசு செய்துத.

## 5. 2023ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கையினை சபைக்கு முன்வைத்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக 2023ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கையினை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

இவ்வுத்தேச பாதீட்டறிக்கையில் இணைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் திருத்தங்கள் இருப்பின் கௌரவ உறுப்பினர்களின் ஆலோசனையினை வழங்கி வைக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் இன்றைய தினம் சபையமர்வு நிறைவு பெற்றதும் பாதீட்டறிக்கை தொடர்பான விசேட கூட்டமொன்றும் கௌரவ உறுப்பினர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, அக்கூட்டத்தில் தவறாது கலந்துக்கொண்டு தாங்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்கி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 6. பிரேரணைகள்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

எனது முதலாவது பிரேரணை, எமது பிரதேச சபைக்குட்பட்ட கட்டட நிர்மானங்கள் தொடர்பானதாகும். கௌரவ தலைவர் அவர்களின் விசேட அறிவித்தலின் ஊடாக தெரிவிக்கப்பட்ட விடயம் உண்மையில் மகிழ்ச்சிகரமான விடயமாகும். எமது மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட சில பிரதேசங்களில், சுமார் பிரதேச சபை காரியாலயத்திலிருந்து கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 50மீற்றர் தூரம் கூட இருந்திருக்காது, சென்ஜோசப் ஆரம்ப பாடசாலைக்கு சொந்தமாக இருக்கின்ற இடத்திற்கும், மஸ்கெலியா தேசிய பாடசாலைக்கு அருகாமையில் இருக்கின்ற வீதி ஓரத்தில் கட்டப்படும் கட்டிடம் தொடர்பாக நிதிக்குழு கூடிய நேரத்தில் குறித்த நபரை அழைத்து தாங்கள் கூறியிருந்தீர்கள். அவ்வாறு கூறியும் தாங்களின் பேச்சையும் மதிக்காமல் அக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளமையினை வன்மையாக கண்டிக்கின்றேன். ஏனென்றால் எனக்கும் ஒரு கௌரவம் இருக்கின்றது. சபைக்கும் கௌரவம் இருக்கின்றது. அதை தாண்டி கௌரவ தவிசாளருக்கென கௌரவம் உள்ளது. தாங்கள் அறிவித்தும் அதனை கண்டுக்கொள்ளாமல் அக்கட்டிடம் கட்டப்பட்டமை தொடர்பான விபரங்கள் அறியப்பட வேண்டும். அத்துடன் அவ்விடயத்திற்கு தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்பதனை கட்டாயமாக கூற வேண்டும். அத்துடன் இவ்விடயத்திற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வேளையிலே எனக்கு கேள்வியொன்று எழுகின்றது, நகர்புறத்திலுள்ள வியாபாரிகள் தமது வியாபார தளங்களை மேம்படுத்திக்கொள்வதற்காக முற்படுவதற்கு ஒருவகையாகவும் 02 வருடத்திற்கு முன்னர் நல்லதண்ணி பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தமது வீட்டின் சமையலறையினை கூட அமைத்துக்கொள்ள கூட அனுமதி வழங்கவில்லை. இதன் காரணமாக கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் எனக்கும் சபையில் பாரிய வாக்குவாதம் கூட நடைபெற்றது. இவ்விடயத்தின் பின்புலத்தில் தவிசாளர் உள்ளரா, செயலாளர் உள்ளாரா? உறுப்பினர்கள் உள்ளனரா என்று சந்தேகமாக உள்ளது. எனவே இவ்விடயத்திற்கு தவிசாளர் உரிய பதிலை வழங்க வேண்டும். அடுத்ததாக நல்லதண்ணி பிரதேசத்தை 06 மாதத்திற்கு மாத்திரமே நாம் ஒரு ஏந்து பிரதேசமாக வைத்துள்ளோம். அதன் பின்னர் அதிலிருந்து விலகியுள்ளோம். நல்லதண்ணி பிரதேசத்திலும் அத்துமீறி கட்டப்படும் கட்டடங்கள் இரவு நேரங்களில் கட்ட ஆரம்பித்துள்ளனர். கௌரவ தவிசாளர் அவர்கள் தமது விசேட பிரேரணையில் இவ்வாறான விடயங்களில் பின்புலத்தில் கௌரவ உறுப்பினர்கள் கூட இருக்கலாமென கூறினார் . நல்லதண்ணி பிரதேசத்தில் அப்படி இருப்பதாக இருந்தால் ஒன்று நான் இருக்க வேண்டும் அல்லது கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்கள் இருக்க வேண்டும். ஆனால் நாங்கள் அவ்வாறு இல்லை. Mango tree விடுதி உள்ள இடத்தில் முறையற்ற விதத்தில் கட்டிடங்களை கட்டிக்கொண்டே செல்கின்றனர்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

திகதி - 2022.10.12

கௌரவ உறுப்பினர் அவர்களே, அந்த கட்டிடம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்து அவர்கள் அதற்கான ஆவணங்கள் எல்லாம் சமர்ப்பித்து விட்டுதான் வேலை தொடங்கியுள்ளனர். அன்றைய தினம் தாங்கள் கூறியதன் பின்னர் அவர்களை வரசொல்லி இன்னொரு முறைப்பாட்டை முன்வைத்துள்ளோம். ஆனால் அவர்கள் வரவில்லை.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நல்லதண்ணி பிரதேசத்தில் கட்டப்படும் கட்டிடத்தை வந்து பாருங்கள். தவிசாளர், செயலாளர், தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு நான் உறுதுணையாக இருப்பேன். என்ன சட்ட நடவடிக்கை வேண்டுமானாலும் எடுங்கள். கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்களும் இதற்கு துணையாக இருப்பார்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தாங்கள் முதலாவதாக கூறிய பாடசாலைக்கு அருகிலுள்ள கட்டிடம் தொடர்பாக, பாடசாலை இடத்தை குடைந்து கட்டடம் கட்டுவதாக பாடசாலையிலும் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளனர். நாமும் பொலிஸில் முறைப்பாடு செய்து வழக்கு தொடர்வதற்கான வேலையை செய்துள்ளோம், எதிர்காலத்தில் அவர்கள் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கட்டாயம் இதற்கான உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, எனது 02வது பிரேரணையாக வீதி அபிவிருத்தி தொடர்பான விடயங்களை முன்வைக்கின்றேன். மறே பிரதேசத்திலுள்ள நல்லதண்ணி முள்ளுகாமம் சந்தியிலிருந்து கெடஸ் வரை போடப்பட்டுள்ள காபட் பாதை தொடர்பாக 03 வருடத்திற்கு முன்னர் நான் கூறியிருந்தேன். கௌரவ அமைச்சர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் உள்ள காலத்தில் அவரின் கருத்துக்கு மதிப்பளித்து வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தொடர்பு கொண்டு கூறியுள்ளேன். பாதுகாப்பு இல்லாத இடங்கள் அங்கு உள்ளது. சில கொங்கீறீட் போடப்பட்டுள்ள இடங்கள் சரிந்து விழக்கூடிய நிலையில் உள்ளது. 05 வருடம் அவர்களின் பராமரிப்பு இருக்க வேண்டும் என்று கூறியிருந்தது. அதுவும் தற்போது முடிந்து விட்டது. காண் இல்லாத இடத்தில் வேகமாக வந்து விபத்துக்கள் ஏற்படுமாயின் மேலிருந்து வரும் வாகனங்கள் நீர்தேக்கத்தில் தான் வந்து நிறகும். இவ்விடயத்தை கரிசனை காட்டி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதமனுப்புமாறு கேட்டுக்கொள்வதோடு, அத்துடன் நல்லதண்ணி பிரதேசத்தில் இருக்கின்ற ரணா கடைக்கு அருகில் மண்சரிவு அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. மக்கள் அச்சத்துடன் உள்ளனர். அங்குள்ள மண்ணை மண் பரிசோதனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். அதற்கான அறிக்கையும் இன்னமும் பெறப்படவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே கெடஸ் பாதையினை திருத்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஒரு மதிப்பீடு செய்தனர், அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நல்லதண்ணி பிரதேசத்திலுள்ள விடயம் தொடர்பாக அதிகாரிகள் அங்கு வருகை தந்திருந்த போது என்னால் அங்கு செல்ல முடியாமல் போனமையின் காரணமாக தாங்களையும் கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்களையும் போக சொல்லியிருந்தேன், தாங்கள் வேலைபளு காரணமாக செல்ல முடியவில்லை என்று கூறியிருந்தீர்கள். மண்பரிசோதனை அதிகாரிகள் வந்து இன்னும் 200 அடிதாழிறக்கம் ஏற்படும் என்று கூறியுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான அவர்களும் நேரடியாக வந்து பார்வையிட்டு உரிய அதிகாரிகளிடம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார். ஆவணங்களை தயாரித்துள்ளனர் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நாங்கள் பாராளுமன்ற அமைச்சர்கள் அல்ல சாதாரண உறுப்பினர், ஆனால் அந்த பாதையை வைத்து என்னையும் கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்களையும் விமர்சிப்பது அதிகமாக உள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அதற்கான முடிந்தளவான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் வந்து பார்த்துள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயத்திற்கான உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதோடு அடுத்த விடயம், மறேயில் எமது பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ராமேஸ்வரன் ஐயா அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட 1000 பாலங்கள் அந்த வேலைத்திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட முதல் பாலம் மறே பிரதேசத்தில் ஆகும். வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எவ்வளவு வலியுறுத்தியும் வேலை மந்த கதியில் தான் நடக்கின்றது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் கேட்ட போது வேலை நடப்பதாக தான் கூறினர். நான் இன்று பேசுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்த விடயம் மஸ்கெலியாவில் இருந்து சாமிமலை செல்கின்ற வீதியும், மஸ்கெலியா – நல்லதண்ணி வீதியும் மஸ்கெலியா – நோர்வூட் செல்லும் வீதியும் பாரியளவு குன்று குழியுமாக உள்ளது. மிகவும் மோசமாக காணப்படுகின்றது. அதற்கான உரிய நடவடிக்கை எடுக்க சபையினூடாக முன்னேற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அடுத்ததாக மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட கௌசிக் ஹாட்வேருக்கு அருகிலுள்ள பாதை மிகவும் குன்றும் குழியுமாக உள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இது தொடர்பாக மதிப்பீட்டை செய்து வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கியுள்ளோம், அவர்களுக்கு பொருட்கள் கிடைத்ததும் நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளனர். இல்லாவிட்டால் சபையினூடாக கொங்கிரீட் சரி இடுவோமென கடந்த சபையிலும் நான் கூறியிருந்தேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அவ்வாறு செய்தால் கூட நன்மையாக அமையும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

இந்த கட்டிட பிரச்சினை சாமிமலை நகரிலும் அதிகமாக உள்ளது. சபையினூடாக அதிகாரிகளை அனுப்பியும் அவர்கள் கட்டிடத்தை கட்டிக்கொண்டு தான் உள்ளனர். இது எமக்கு பாரிய பிரச்சினை. இவ்விடயம் காரணமாக அனைத்து கௌரவ உறுப்பினர்களும் பாதிக்கப்படுகின்றனர். சபையின் அதிகாரிகளுக்கு அவர்கள் மதிப்பளிக்கும் வகையில் நடந்துக்கொள்ள வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே இவ்விடயம் தொடர்பாக அனைத்து ஆவணங்களும் கிடைக்கப்பெற்றுள்ளது. உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக ஒவ்வொரு சபையிலும் போது எந்த கை ஊட்டலிலும் ஈடுபடாத நல்ல கௌரவ உறுப்பினர்களையும் அது பாதிக்கும். இனி அனுமதி இல்லாமல் கட்டிடம் கட்டினாலும் அதற்கு முறைப்பாடு செய்யப்படும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் சுரேஸ்குமார் அவர்களின் பிரேரணையினை வழிமொழிவதோடு, வீதி அபிவிருத்தி தொடர்பாக அவர் பல்வேறு விடயங்களை முன்வைத்திருந்தார். கௌரவ தவிசாளர் அவர்களே இன்று உள்ள நிலைமையில் இருக்கின்ற வீதிகளும் இல்லாமல் போவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அவர் குறிப்பிட்ட சாமிமலை, நல்லதண்ணி பாதை ஓல்டன் - சாமிமலை பாதை, காட்மோர் பாதை என்பவற்றை உள்ளடக்கி, பெருந்தெருக்கள் அமைச்சுக்கு கடிதமொன்றை கௌரவ தவிசாளர் அவர்கள் அனுப்புவீர்களேயானால் நன்மை பயக்கும். பண்டிகை காலம் நெருங்கி வரும் சந்தர்ப்பத்திலே இருக்கின்ற பாதைகளுக்கு கொங்கிரீட் கலவை இடுவதாக, மஸ்கெலியாவில் இருந்து குயின்ஸ்லேன்ட் வரை குறிப்பிட்ட சில இடங்களுக்கு இடப்பட்டுள்ளது. அவற்றை போட்டதன் பின்னர் அக்குழிகள் இன்னும் அகலமாகி அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது. வாகனங்கள் தொடர்ந்து செல்லும் போது அக்குழிகள் இன்னும் பெரிதாகின்றது.

இன்று இருக்கின்ற சிறிய பாதிப்பு இன்னும் அதிகரித்து செல்லும் போது அதற்கான செலவீனங்களும் அதிகரித்து செல்லும். எனவே இதற்கு வெகு விரைவாக ஏதாவது ஒரு நடவடிக்கை செய்ய வேண்டும். அத்துடன் மறே காபட் பாதை, ஸ்டொக்கம் - லோவகுருடன் காபட் பாதை வீதி அபிவிருத்தி அதிகார

சபையின் கண்காணிப்பின் கீழ் சியரா அமைப்பின் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்டு, தற்போது எந்த அரச திணைக்களமும் பராமரிக்காமல் அநாதையாக கைவிடப்பட்டு உள்ளது. உரிய நிறுவனத்திடம் இது தொடர்பாக தொடர்பு கொண்டு கேட்ட போது பிரதேச சபைக்கு இப்பாதை பொறுப்புகளை வழங்கிவிட்டதாக கூறினர். நிர்வாக ரீதியாக இவற்றை கொண்டு நடத்த பொருளாதார ரீதியான பிரச்சினை பிரதேச சபையிடம் உள்ளது என்று தெளிவாக எடுத்துரைத்தும் அப்பாதைகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. கோடிக்கணக்கான ரூபாய் செலவில் இப்பாதைகள் அமைக்கப்பட்டு தற்போது கவனிப்பார் அற்று கிடக்கின்றது. தேயிலை தோட்டத்தில் உள்ள கழிவுகள் அனைத்தையும் இப்பாதையில் வீசுகின்றனர். பாதையில் மண்சரிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது, வடிகாண்கள் பாதிப்படைந்துள்ளது. இது தொடர்பாக செயலாளரிடமும் தொடர்பு கொண்டு பேசியிருந்தேன். இது வரையிலும் இவற்றுக்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இப்பாதைகளை கொண்டு நடத்த வேண்டிய அதிகாரம் தொடர்பாக கடிதமனுப்பி விடயங்களை கொண்டு செல்லவும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபைக்கு முன்னதாக பாதை விடயம் தொடர்பாக தவிசாளர் அவர்களிடம் கேட்டிருந்தேன். இப்பாதையை செப்பனிடுவதாக தவிசாளர் அவர்கள் கூறியிருந்தீர்கள். மஸ்கெலியா நகரில் பாரிய குழிகள் காணப்படுகின்றன, இதன் காரணமாக ஏற்படும் வாகன விபத்துக்களில் பாடசாலை மாணவர்கள் பாதிப்படைவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பாக அதிக கவனம் எடுக்கவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக உத்தேச மதிப்பீடு எடுக்க சொல்லியுள்ளோம், அதற்கிடையில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய மூலப்பொருட்கள் கிடைத்து விட்டால் அதற்கான வேலைகளை மேற்கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பொருட்கள் கிடைக்கும் வரையில் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது எப்போது இவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கையும் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தவிசாளர் பதில் கூறிய பின்னரும் மீண்டும் மீண்டும் அதே கேள்வியை கேட்பது பிழை.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட காபட் பாதை வேலைத்திட்டத்தில் நோர்வூட் இல் இருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபை வரைக்கும் வேலை நிற்கின்றது. நல்லதண்ணியில் இருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபை வரை பாதை செய்யப்பட்டிருக்க வேண்டும். தற்போது அந்த வேலைத்திட்டம் முடங்கியுள்ளது. மஸ்கெலியா – நோர்வூட் வரை பாரிய சிக்கலுக்கு மத்தியில் தான் பாதையை பயன்படுத்தகின்றனர். வைத்தியசாலைக்கு செல்லும நோயாளிகள் மிகவும் பாதிப்படைகின்றனர். எனவே இவ்விடயத்தை துரித கதியில் செய்யும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

**தீர்மான இல 18**

மேற்குறித்த விடயம் தொடர்பாக பெருந்தெருக்கள் அமைச்சு, மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் கே.நித்தியானந்தன் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

320 B கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட லக்சபான தோட்டத்தில் உள்ள வாழமலை எமில்டன் முள்ளுகாமம் கீழ்பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடும் விசம் கொண்ட கருநாகப்பாம்புகள் நான்கு ஐந்து இருக்கின்றுத வாழமலை தோட்டத்தில் மருந்தகத்திற்கு அருகாமையில் பாம்பு ஒன்று உள்ளது. எனவே பாடசாலை

மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் மிகவும் அச்சத்துடன் செல்கின்றனர். முள்ளுகாமம் கீழ்பிரிவு நல்லதண்ணீர் தமிழ் மகா வித்தியாலத்திற்கு அருகாமையில் விச பாம்பு ஒன்று உள்ளது. இப் பாடசாலையில் 900 – 1000 வரையான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கேயும் மாணவர்கள் அச்சத்துடன் செல்கின்றனர். லக்சபானயிலிருந்து பாடசாலைக்கு செல்லும் பாதையில் விஷ பாம்பு உள்ளது. எனவே பொது மக்கள் பயத்தின் மத்தியிலேயே பயணிக்கின்றனர். எவ்வேளையிலும் இவர்களை தாக்கலாம். இது சம்மந்தமாக கிராம சேவகர் பொலிஸ் நிலையம் வன விலங்கு பாதுகாப்புத்துறை பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தியும் எவ்வித பயனும் இல்லை எனவே சபையினூடாக உரிய இடத்திற்கு தெரிவித்து பாம்புகளை பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

320 B கிராம சேவகர் உட்பட்ட மஸ்கெலியாவிலிருந்து நல்லதண்ணிக்கு செல்லும் பிரதான பாதையில் மோகினி எல்ல அருகாமையில் 27ம் மைல் கல் அருகாமையில் 02 மாதத்திற்கு முன்னர் பாரிய மண்சரிவு மற்றும் தாழ் அமுக்கம் ஏற்பட்டது. அதனை நேரடியாக நுவரெலியா பாரளுமன்ற உறுப்பினர்க்ள கௌரவ ஜீவன் தொண்டமான் பார்வையிட்டு பாதையை புனரமைப்பதற்கு தெரியப்படுத்தி தற்போது 288 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இப்பாதையை புனரமைப்பதற்கான அழுத்தத்தை வழங்குவது அதனை போன்று லக்சபான ஊடாக வாழமலை இருந்து முள்ளுகாம சந்தி வரை 3 கிலோ மீற்றர் கொங்கிறீட் இடுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பாதையை சீர் செய்வதற்கு தகுந்த நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பி வேலையை ஆரம்பிப்பதற்கு சபையின் ஊடாக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

கவரவல ஏ பிரிவிலும் இவ்வாறான பாம்பு ஒன்று உள்ளது, அதனையும் வன ஜீவராசிகள் அமைச்சுக்கு அறிவித்து உரிய நடவடிக்கை எடுக்கவும்.

**தீர்மான இல 19**

இவ்விடயம் தொடர்பாக வன ஜீவராசிகள் அமைச்சுக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எனது முதலாவது பிரேரணையாக, மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சுயத்தொழிலை மேம்படுத்துவது தொடர்பான விடயத்தை முன்வைக்கவுள்ளேன். மஸ்கெலியாவில் சுயத்தொழில் மிகவும் குறைவாகவே உள்ளது. இதில் விவசாயத்தை எடுத்துக்கொண்டால் அதற்கான உரமின்மை பிரச்சினையாக உள்ளது. மஸ்கெலியா பிரவுன்லோ வட்டாரத்தில் எனக்கு வழங்கப்பட்ட 12 இலட்சம் ரூபா நிதியில் சிறிய அளவிலான ஆடைத்தொழிற்சாலை ஒன்றை நான் ஆரம்பிக்கவுள்ளேன். சுயத்தொழில் மற்றும் பயிற்சி நிலையமாக முன்னெடுக்கவுள்ளேன். இதே போல அனைத்து வட்டாரங்களிலும் சுயத்தொழிலை ஊக்குவிப்பதற்கான வேலைகளை செய்ய வேண்டும். சபையினூடாக கூட சவர்க்காரம் தயாரிக்கும் பயிற்சி வேலைத்திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தீர்கள் உண்மையில் அது வரவேற்கத்தக்க விடயம். இது போன்று பொம்மைகள் செய்வது, பதிக் வேலைகள் போன்றவற்றை விடயங்களுக்கு பெண்களை ஊக்கப்படுத்த வேண்டும். பிரதேச செயலகத்திற்கு கிடைக்கும் நிதியில் சுயத்தொழிலை ஊக்குவிக்க அவர்கள் தயாராக உள்ளனர். அது தொடர்பாக சரியான வேலைத்திட்ட பிரேரணை ஒன்றை முன்வைத்தால் அதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளனர். மஸ்கெலியா பிரதேசத்திற்கு என்ன செய்தால் பொருத்தமானதாக இருக்குமென சபையினூடாக கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுத்தால் அது பொருத்தமாக இருக்கும். இதற்கான மகளீர் விவகார அமைச்சு, மாவட்ட செயலகம், பிரதேச செயலகத்திற்கு கடிதமொன்றை அனுப்பி வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு உதவியை பெற்றுத்தரவும்.

**தீர்மான இல 20**

குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மகளீர் விவகார அமைச்சு, மாவட்ட செயலகம், பிரதேச செயலகத்திற்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

## 07. ஏனைய விடயங்கள், விசேட அறிவித்தல்கள் மற்றும் எதிர்வரும் சபைக்கான திகதியை அறிவித்தல்.

- கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களினால் நல்லதண்ணி மகா வித்தியாலயத்தின் ஆசிரிய இடமாற்றம் மற்றும் மஸ்கெலியா பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

**தீர்மான இல 21**

மேற்குறித்த விடயம் தொடர்பாக மாகாண கல்வி பணிப்பாளருக்கும் அட்டன் கல்விப் பணிமனையிற்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்களினால் நலன்புரி நன்மைகள் எனும் கூப்பன் வழங்கும் வேலைத்திட்டத்தில் தோட்ட தொழிலாளர்கள் மற்றும் வாகன ஓட்டுனர்களை உள்வாங்காமை தொடர்பான விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்வேலைத்திட்டத்தினை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பாக அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் கலந்துரையாடவுள்ளோம்.

**தீர்மான இல 22**

குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திற்கும், மாவட்ட செயலகம், பிரதேச செயலகத்திற்கு கடிமதனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**